**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.21/2016**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17–ம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.08.2023 | தந்தை பெயர்: | அருணாசலம் |
| பெயர்: | சின்னதுரை<br>(PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருநன்றியூர் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 74 /2023 |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 17.08.2023.</u>**

இடைமனு எண்.2/2023-ல் 10.08.2023-ம் தேதிய உத்தரவுப்படி வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிராமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்

தங்காயாள் எனது தாயார் அவர் 24.11.1992–ல் இறந்துவிட்டார். இறந்துபோன எனது தாயார் தங்காயாளின் 18.04.2018–ம் தேதிய வாரிசு சான்றின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.